**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 18/2013**
**நாள் :16/02/2021, செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ரவி | த/பெயர் - அருணாச்சலம் |
| வயது - 60 | விவசாயம்- விவசாயம் |
| சாதி - | மதம் - |
| விலாசம் - மேல்முதலம்பேடு | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (DW1)**

இந்த வழக்கின் 5ம் பிரதிவாதியான ராதாகிருஷ்ணன் பொன்னேரி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ராதாகிருஷ்ணன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நானும் பதில் அனுப்பியுள்ளேன். பதில் அறிவிப்பை என் சகோதர சகோதரிகளிடம் கலந்து ஆலோசித்த பின்பு அதன்பிறகு அனுப்பினேன். ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த வழக்கானது தற்போது வரை கும்மிடிப்பூண்டி உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அசல் வழக்கு எண்.267/2019 என புதிதாக கும்மிடிப்பூண்டி உரிமையியல் நீதிமன்றத்தில் எண் கொடுக்கப்பட்டது. மேற்படி வழக்கில் இந்த வழக்கின் வாதி புனிதாவிடம் கலந்தாலோசனை செய்யாமல் வக்காலத்து மற்றும் எதிர் வழக்குரையை நான் தன்னிச்சையாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எதிர்வழக்குரையயை வாதி புனிதாவிற்கும் சேர்த்து நான் தாக்கல் செய்துள்ளேன்.

ராதாகிருஷ்ணன் என்னுடைய பெரியப்பா மகன் ஆவார். ராதாகிருஷ்ணன்-க்கும் என் தந்தை அருணாச்சல முதலியாருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ராதாகிருஷ்ணணின் அம்மா தெய்வநாயகி அம்மாளுக்கும், என் தந்தை அருணாச்சல முதலியாருக்கும் இடையே 1959ல் பாகப்பிரிவினை ஏற்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் அவ்வாறு ஒரு ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 செட்டில்மென்ட் ஆவணத்தில் ராதாகிருஷ்ணன்-ம் அருணாச்சல முதலியாருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாக இருக்கிறது என்றும், ஆகவே தெய்வநாயகி அம்மாளுக்கும், அருணாச்சல முதலிக்கும் 1959ல் பாகம் ஏற்படவில்லை என்று சொன்னால் தெய்வநாயகி அம்மாள் ராதாகிருஷ்ணன்-ன் காப்பாளர் என்ற முறையில் பாகப்பத்திரத்தை எழுதிக் கொண்டுள்ளார். அப்போது ராதாகிருஷ்ணன் இளவர் ஆவார். ராதாகிருஷ்ணன் இளவர் என்று குறிப்பிட்டு பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சி தாமாக முன்வந்து பட்டாவில் ராதாகிருஷ்ணன்-ன் பெயர் இருப்பதால் தெய்வநாயகி அம்மாள் காப்பாளர் என்ற முறையில் பாகம் எடுத்துக்கொண்டார். 1959ம் ஆண்டு ராதாகிருஷ்ணன் இளவர் என்பதாலும் மேற்படி சொத்தானது அருணாச்சல முதலி மற்றும் துரைசாமி முதலி ஆகியோரின் கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் இளவர் பெயரில் பட்டா மாறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். 1959ல் கூட்டுக்குடும்பத்தில் பாகப்பரிவினை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பெரியோர்களால் மத்தியஸ்தம் செய்ய்ப்பட்டு பதிவு செய்யப்படாத கூரைச்சீட்டு எழுதப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிர் வழக்குரையில் 3வது பக்கத்தில் 12வது பத்தியில்

சொத்தை ஒரு பாகத்தில் தெய்வநாயகி அம்மாளுக்கும், மற்றொரு பாகத்தில் அருணாச்சல முதலிக்கும் பிரித்து கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி புனிதாவும், 4ம் பிரதிவாதி மாலாவும் எனது இளைய சகோதரிகள் ஆவர். 2003 மற்றும் 2005ல் ஏற்படுத்தப்பட்ட வா.த.சா.ஆ.1 மற்றும் 2 செட்டில்மென்ட் ஆவணத்தில் வாதி மற்றும் 4வது பிரதிவாதி ஆகியோரின் ஒப்புதல் இல்லாமலேயே செட்டில்மென்ட் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏனென்றால் அப்போது பெண்களுக்கு சொத்தில் பாகம் கொடுக்க தேவையில்லை என்று பதிவுத்துறையில் கூறியதால் அவர்களிடம் கையெழுத்து பெறவில்லை. அவர்களுக்கு 1984லேயே திருமணம் முடித்துவிட்டதால் சொத்தில் பங்கு வராது என்று கூறினார்கள். 4வது பிரதிவாதி மாலாவிற்கு 2003 அல்லது 2005ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. சரியாக நினைவில்லை. என் தந்தைக்கு எழுத படிக்க தெரியாது. ஆனால் 2003 மற்றும் 2005ம் ஆண்டு செட்டில்மென்ட் ஆவணங்கள் அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அதன்பிறகு எழுதப்பட்டது. வா.த.சா.ஆ.1 மற்றும் 2 செட்டில்மென்ட் ஆவணங்களில் அவ்வாறு படித்துக் காண்பிக்கப்பட்டு எழுதப்பட்டதாக வாசகம் இடம் பெறவில்லை. எனக்கு தற்போது 60 வயதாகிறது. வழக்கு சொத்துகள் கூட்டுக்குடும்ப சொத்துகள் ஆகும். அதை என் தந்தை மற்றும் நாங்களும் சேர்ந்து சம்பாதித்தோம். ரோஜம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது. ரோஜம்மாள் நடேச முதலியின் மனைவி ஆவார். நடேச முதலி என் தாத்தாவின் தம்பி மகன் ஆவார். ரோஜம்மாளுக்கு எல்லா விவரமும் தெரியும். ரோஜம்மாள் எழுதிய உயில் பொன்னேரி, சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. மேற்படி உயிலை வழக்கறிஞர் பாலாஜி அவர்கள்தான் தயாரித்தார்.

மேற்படி உயிலில் பரமசிவம் த/பெ சேமநாயக்கர், திருப்பதி த/பெ ஏழுமலை ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்து இட்டுள்ளார்கள். ரோஜம்மாளை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு என்னுடைய பெரியப்பா மனைவி கிளியம்மாள்தான் அழைத்து வந்தார். கிளியம்மாள்தான் ரோஜம்மாளை ஆட்டோவில் ஏற்றி அனுப்பி வைத்தார். கிளியம்மாள் உடன் வரவில்லை. ரோஜம்மாள் மற்றும் கிளியம்மாள் இருவரும் சகோதரிகள் ஆவர். இருவரும் பேசிதான் சொத்தை எங்கள் பெயரில் எழுதி வைத்தார்கள். கிளியம்மாள் 2016 ல் இறந்துவிட்டார். ரோஜம்மாளும், கிளியம்மாளும் இறக்கும் வரை ஒன்றாக இருந்தார்கள். அவர்கள் என் தந்தை அருணாச்சல முதலியின் பாதுகாப்பில் இருந்தார்கள். என் அப்பாவின் காலத்திற்கு பிறகு நான் அவர்களுக்கு பாதுகாவலராக இருந்தேன். நானும் என் தம்பியும் ஒன்றாக பொதுக்குடும்பமாக இருக்கிறோம். ரோஜம்மாளும், கிளியம்மாளும் ஆலோசனை செய்து கொண்டு சொத்தை எங்கள் பெயரில் உயில் எழுதி வைத்தார்கள். மேற்படி உயிலை பொன்னேரியில் தட்டச்சு செய்தோம். எங்கு செய்தோம் என்று நினைவில்லை. அதற்கான பத்திரத்தை ரோஜம்மாள் பெயரில் வழக்கறிஞர்தான் வாங்கி வந்தார். உயிலை வழக்கறிஞர்தான் வாசகத்தை உபயோகித்து தயார் செய்தார். நான்தான் சொத்திற்கான அனைத்து ஆவணங்ளையும் வழக்கறிஞருக்கு கொடுத்தேன். ரோஜம்மாளுக்கு உயிலை படித்துக் காண்பித்ததாக உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ரோஜம்மாள் உயிலை தயார் செய்தவுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பதிவு செய்தோம். அசல் உயிலானது என்னிடம்தான் உள்ளது. மேற்படி உயிலை வழக்கறிஞர் கேட்காததால் கொடுக்கவில்லை. உயிலில் உள்ள 2 சாட்சிகளும் எனக்கு தெரிந்தவர்கள்தான். மேற்படி சாட்சிகள் இருவரையும்

நான்தான் சென்று அழைத்து வந்தேன். ஏனென்றால் ரோஜம்மாளுக்கு வயதாகிவிட்டது. உயில் எழுதும்போது ரோஜம்மாளுக்கு சுமார் 70 வயது இருக்கும். இவ்வழக்கின் பி அட்டவணைச் சொத்தானது துரைசாமி முதலிக்கும், அருணாச்சல முதலிக்கும் பாத்தியப்பட்ட சொத்தாகும். வழக்குச் சொத்து உயில் சொத்து என்பதால் அதில் குறிப்பிட்டுள்ள ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே பாத்திய்ப்பட்டது ஆகும். பெண் வாரிசுகளுக்கு அதில் உரிமை இல்லை. அவ்வாறு உயில் இருப்பதாக எதிர் வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளேன். 1910ம் ஆண்டு பத்திரப்பதிவு செய்யப்படாத உயில் என்னிடம்தான் உள்ளது. ராதாகிருஷ்ணன் வழக்கு தாக்கல் செய்யும்போதுதான் மேற்படி உயில் இருப்பதாக எனக்கு தெரிய வந்தது. ராதாகிருஷ்ணன் வழக்கு தான் முதலில் தாக்கல் செய்யப்பட்டது. 1910ம் ஆண்டு ஏற்பட்ட உயில் பற்றி இந்த வழக்கில் தெரியவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் சிதிலமடைந்துவிட்டது. ரோஜம்மாளுக்கு உயில் எழுதிய காலத்தில் சரியாக கண் பார்வை தெரியாது என்றும், எதற்காக செல்கிறோம், எங்கு செல்கிறோம் என்று தெரியாது என்றும் அதை சாதகமாக பயன்படுத்தி மோசடியாக உயிலை எங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டோம் என்றால் சரியல்ல. வாதி மற்றும் 4ம் பிதிவாதி ஆகியோருக்கு திருமணம் முடித்துவிட்டதால் சொத்தை ஆண் வாரிசுகள் என்ற அடிப்படையில் நாங்கள் பயிர் செய்து வந்தோம் என்றும், அதிலுள்ள பலன்களை வாதி மற்றும் 4வது பிரதிவாதிக்ளு அவ்வப்போது கொடுத்துவந்தோம் என்றும், அதனால்தான் சொத்து எங்கள் வசம் இருந்தது என்றால் சரியல்ல. அவர்களுக்கு திருமணத்தின்போது 80 சவரன் தங்க நகைகள் கொடுத்து திருமணம் முடித்துக் கொடுத்துவிட்டோம். 2003 மற்றும் 2005ல் ஏற்பட்ட

செட்டில்மென்ட் ஆவணங்களையும் 2005ம் ஆண்டு ரோஜம்மாள் ஆகியோருக்கு எழுதிக் கொடுத்த விவரமே தெரியாது என்று சென்னால் சரியல்ல தெரியும். வாதிக்கு இவ்வழக்கில் ஏ அட்டவணைச் சொத்தில் 6/25 பாகமும், பி அட்டவணைச் சொத்தில் 6/50 பாகமும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த வழக்கில் வாதிக்கு தெரியாமலேயே எனக்கு சாதகமாக எதிர் வழக்குரையயை தயாரித்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு வாதி எங்கள் ஊருக்கு வந்ததே இல்லை என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ளளேன் என்றால் அது தவறாகும். வாதி அவ்வப்போது ஊருக்கு வந்து செல்வார். பிரசவ காலத்திலும், சீர்வரிசை மற்றும் விழாக்காலத்திலும் வந்துச் செல்வதுண்டு. வாதி, என் தாயார், சேகர் மற்றும் மாலா ஆகியோர் வழக்குச் சொத்தின்மீது கடன் பெறுவதற்கு ஆட்சேபணை இல்லாக் கடிதம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கடன் ஆனது 2003 அல்லது 2005ல் வாங்கி இருப்போம். ஆட்சேபணை இல்லாக் கடிதம் 2008ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பி.த.சா.ஆ.10 ஆவணம் வாங்கப்பட்டுள்ளது என்றால் அது 2வது முறையாக வாங்கப்பட்டது ஆகும். என் அம்மாவிற்கும், சகோதரிகளுக்கும் ஆங்கிலம் தெரியாது. பி.த.சா.ஆ.10 ஆவணமானது ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதால் என்றால் என் அம்மாவிற்கும், என் சகோதரிகளுக்கும் தெரிய வாய்ப்பு இல்லை என்றால் வழக்கறிஞர் அர்த்தம் சொல்ல நான் விளக்கிக் கூறினேன். கும்மிடிப்பூண்டியில் தொடரப்பட்ட வழக்கில் என் சகோதரிகள் வக்காலத்து மற்றும் சம்மனிலும் கையெழுத்து போட்டுள்ளார்கள். வாதி புனிதா பூவலம்பேட்டில் வசித்து வருகிறார். மாலா சின்னம்பேட்டில் வசித்து வருகிறார். வாதி புனிதாவிற்கு அழைப்பாணை

சார்பு செய்யப்படவில்லை என்றும் அவர்கள் சார்பாக நாங்கள்தான் அழைப்பாணையை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் கூட்டு அனுபவத்தில் இருப்பதாலும், சொத்தின் பலன்களை பெற்று வருவதாலும் அவர் போதுமான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி விட்டார் என்றும், அவர் கட்டிய நீதிமன்ற கட்டணம் சரியானது என்றால் அதுபற்றி தெரியாது. எதிர் வழக்குரையில் விவரங்களை வழக்கறிஞர் ஆங்கிலத்தில் கூறியுள்ளதால் அதன் விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். வாதிக்கு வழக்கின் பரிகாரங்கள் படி தீர்ப்பு செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

கூடுதல் சார்பு நீதிபதி,
பொன்னேரி.